1981 ஏப்ரல் 22]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலே உண்டு என்று தெரிவித்ததற்காக நன்றி. திண்டுக்கல் பகுதி இன்னொரு மாவட்டமாகவே ஆரம்பிக்கக்கூடிய தகுதிபெற்றது. மதுரை வடக்கு மேற்கு தாலுகாக்களைச் சேர்த்து, திண்டுக்கல் பகுதியிலே உள்ள மக்களின் வசதிகளைக் கருதி துரிதமாக அதைப் பரிசீலனை செய்து எப்போது அமல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதன் அவசியத்தை அரசு உணர்ந்த காரணத்தால் தான் மதுரை, மேலூர், திருமங்கலம், உசிலம்பட்டி, நிலக்கோட்டை ஆகிய பகுதிகளை சேர்த்து ஒரு பிரிவும், பெரிய குளம், பழனி, உத்தமபாளையம் கொடைக்கானல், வேடசந்தூர் ஆகிய பகுதிகளை சேர்த்து இன்னொரு பிரிவும் வருகிற பார்ட் 2 ஸ்கீமிலே சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கழகக் குரல் பத்திரிகை 1975-வது ஆண்டு வெளியிட்ட அண்ணா பிறந்த நாள் விழா மலர்.

வினா எண். 840—திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 'கழகக் குரல்' என்ற தமிழ்ப்பத்திரிகை 1975 ஆம் ஆண்டு அண்ணா பிறந்த நாள் விழா மலர் வெளியிட நிலவள வங்கியில் இருந்து விளம்பரப் பணம் எவ்வளவு கொடுக்கப்பட்டது ?

(ஆ) மலர் வெளியிடப்பட்டதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ரூ. 2,000

(ஆ) ஆம்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கூட்டுறவு இயக்கங்களைப் பயன்படுத்தி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி கட்சிப் பிரச்சாரத்திற்காக பயன்படுத்தியிருக்கிறார்கள். முந்தைய ஆட்சிக் காலத்திலே அரசு இயந்திரங்களை பயன்படுத்தி கையாடல் செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. விளம்பரம் வாங்குவது கையாடலில் வராது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[1981 ஏப்ரல் 22

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, அரசு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு கழகக்குரல் என்ற பத்திரிகைக்கு விளம்பரங்கள் வாங்கப்பட்டும் அந்தப் பத்திரிக்கை வெளியிடப்படவில்லை என்ற நிலைமை இப்போது இருக்கிறது என்று அறிகிறோம். அதற்காக அரசு இயந்திரங்கள் மூலமாக வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய மூலவினாவினைப் பொறுத்த வரைக்கும் 2 ஆயிரம் ரூபாய்க்கு விளம்பரம் கொடுக்கப்பட்டு அது தவறானது என்ற அடிப்படையில் அதை வசூல் செய்ய வேண்டுமென்று திரு. செல்வராஜ் கூட்டுறவு நல வங்கியின் தலைவருக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த கூட்டுறவு வங்கிகள், அமைப்புகளின் மூலம் அப்படி விளம்பரத்திற்கு தரப்பட்டது என்று கேட்டார்கள். அது பெரிய பட்டியலாக இருப்பதால் நான் படிக்க முடியாது என்று நினைக்கிறேன். தமிழ்கத்தின் ஒவ்வொரு பகுதியிலேயும் இருக்கின்ற கூட்டுறவு சங்கங்கள் அல்லது அமைப்புகளின் மூலமாக 28,200 ரூபாய் கழகக் குரல் என்ற பத்திரிக்கைக்கு விளம்பரம் தரப்பட்டிருக்கிறது. அது முறைகேடு என்று கருதப்பட்டு பதிவாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

[முற்பகல் 9-40]

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, இது போன்று குறிப்பிட்ட இந்த 1975 ஆம் ஆண்டில் விளம்பரம் வாங்கப்பட்டு மலரே வெளியிடப்படவில்லை என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதுபோன்ற வேலையில் ஈடுபடும்பத்திரிக்கைகள் இப்போதுவெளியிடப்பட்டு வருகிறதா அதற்கு ஆசிரியர் யார் அந்தப் பணத்தை வசூல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 'கழகக் குரல்' என்ற தலைப்பிலேயே வெளியிடப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தைச் சார்ந்த அந்தப் பத்திரிகை தற்பொழுது வருகிறதா என்பதற்கான தகவல் இல்லை. 1974 ஆம் ஆண்டிலிருநது 10—1—76 வரைக்கும் தமிழகத்தின் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பல்வேறு காலக் கட்டங்களில், குறிப்பாக, பொங்கல் மலர் என்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநாட்டு மலர் என்றும், கலைஞர் பிறந்ததின விழா மலர் என்றும் வெளியிட்டு, ஒட்டுமொத்தமாக 28,200 ரூபாய் விளம்பரத்திற்காகத் தரப்பட்டிருக்கிறது. அந்தக் காலகட்டத்தில் செய்யப்பட்ட அந்தப் செலவு முறைகேடானது என்று அந்தப் பணத்தைத் திருப்பி வசூல் செய்யவும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டு அது நடைமுறையிலிருந்து வருகிறது.

1981 ஏப்ரல் 22]

திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே மூலக் கேள்வி 1975-ஆம் ஆண்டு அண்ணா பிறந்தநாள் விழா மலரை 'கழகக் குரல்' பத்திரிகை வெளியிட்டதா என்பது. நிலவள வங்கியிலிருந்து இருந்து விளம்பரப் பணம் எவ்வளவு கொடுக்கப் பட்டது என்பது கேள்வி. அடுத்து உள்ள மலர் வெளியிடப் பட்டதா என்ற அமைச்சரவர்கள் சொன்ன பதில் எனக்குச் சரியாகக் கேட்கவில்லை. எனவே அமைச்சரவர்கள் அருள் கூர்ந்து மறுபடியும் அதற்கான விடையைச் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் எந்தக் குறிப்பிட்ட சங்கத்தைப்பற்றியும் கேட்க வில்லை ; பொதுவாகக் கேட்டார்கள். அதற்கு ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். மூலக்கேள்வியில் உள்ள இரண்டாவது கேள்வி, அதாவது (ஆ) என்பதற்கான கேள்வி 'மலர் வெளி யிடப்பட்டதா' என்பது. அதற்கு என்னுடைய விடையில் 'ஆம்' என்று சொன்னேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மலர் வெளியிடப்பட்டதா என்ற கேள்விக்கு 'ஆம்' என்று பதில் சொல்லியாகிவிட்டது.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அந்தப் பதிலை நான் கேட்டுக்கொண்டேன். முன்பு அவர்கள் சொன்னபொழுது அது சரியாகக் கேட்கவில்லை என்பதற்காக அருள்கூர்ந்து மறு படியும் கூறும்படி கேட்டுக் கொண்டேன். (கூச்சல்—குழப்பம்) தலைவரவர்களே உங்களுடைய சொல்லுக்கு நான் கட்டுப்படு வேனே தவிர இந்தக் கூச்சலுக்கெல்லாம் அடங்கிவிடமாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் மூலக்கேள்வியில் இரண்டாவது பகுதியான 'மலர் வெளியிடப்பட்டதா' என்று கேட்ட கேள்விக்கு 'ஆம்' என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். மாண்பு மிகு உறுபினரவர்கள் வேறு என்ன கேள்வி கேட்க வேண்டு மென்று விரும்புகிறார்கள்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன பதில் என்னுடைய காதில் சரியாக விழவில்லை. மலர் வெளியிடப்பட்டதா என்ற கேள்விக்கு ஆம் என்று சொன்னாரா அல்லது இல்லை என்று சொன்னரா என்பது எனக்குத் தெரிய வில்லை என்பதால்தான் அந்த விளக்கத்தைக் கேட்டேன்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே ஒரு கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கான விடையையும் அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த விடைக்கு மறு படியும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் கேள்வி கேட்க வில்லை ; விளக்கம்தான் கேட்டார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது எழுந்திருப்பது ஒரே யொரு பிரச்னைதான். கேள்வி நேரத்தில் கேள்விதான் கேட்க முடியுமே தவிர விளக்கம் கேட்க முடியாது. தாங்கள் ஏற்கனவெ ஒரு துணைக் கேள்வி கேட்க அனுமதித்தீர்கள். சாதாரண மாக மூலக்கேள்வி கேட்டவர்களுக்குத்தான் இரண்டு துணைக் கேள்விகள் கேட்க அனுமதிப்பது மரபு. அப்படியிருக்கும் பொழுது அப்படி மூலக்கேள்வி கேட்காதவர்களுக்கு இரண்டா வது துணைக் கேள்வியைக் கேட்பதற்கு அனுமதிக்கலாமா என்பதுதான் இப்பொழுது எழுந்துள்ள பிரச்னை.

திரு. துரைமுருகன் : நான் கேள்வி கேட்டிருந்தால் மாண்பு மிகு மின்சாரத் துறை அமைச்சர் சொன்னதை ஒத்துக்கொள் வேன். ஆனால் விளக்கம்தான் கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் விளக்கம் கேட்பது அனுமதிக்கப்படுவது வழக்கமில்லை. அமைச்ச ரவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

திரு. துரைமுருகன் : மூலக் கேள்வியில் இரண்டாவது கேள்விக்குச் சொன்ன பதில் எனக்குச் சரியாகக் காதில் விழ வில்லை. ஆம் என்று சொன்னாரா அல்லது இல்லை என்று சொன்னாரா என்பது எனக்குக் கேட்கவில்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே என்னுடைய நினைவு சரியாக இருக்குமே யானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் அதை வினாவாகத்தான் கேட்டார் என்று கருதுகிறேன்; விளக்க மாகக் கேட்கவில்லை. சபைக் குறிப்பைப் பார்த்தால் தெரியும்.

திரு. துரைமுருகன் : மலர் வெளியிடப்பட்டதா என்ற பகுதியில் ஆம் என்றார்களா, இல்லை என்றார்களா என்று காதில் விழவில்லை. ஆகவே, நான் அதைக் கேட்டேன்.

THE HON. THIRV C. PONNAIQAN: Mr. Speaker Sir, That is a qnestion. Whether it is 'yes' or 'no'? That itself is a question.

திரு. துரைமுருகன் : மூலக் கேள்விக்கான விடையிலே மலர் பாவெளியிடப்பட்டத என்று காதில் விழவில்லை.

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே நீங்கள் விளக்கம் கேட்பதற்குச் கேள்வி நேரத்தில் தாராளமாக அனுமதி யுங்கள், ஆனால் அதே விளக்கத்தை மற்ற சட்டமன்ற

உறுப்பினர்கள் கேட்கும்போது அதே சந்தர்ப்பத்தைக் கண்டிப்பாக நீங்கள் தரவேண்டும். இங்கேயிருக்கிற திரு. துரைமுருகன் அவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமை, மற்ற எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கிறது. அந்த உரிமையை எங்களுக்கும் தாருங்கள் என்றுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாராளமாகத் தரலாம். அடிக்கடி விளக்கம் கேட்டுக் கொண்டே இருக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தின்போது ஒரு உறுப்பினர் ஒரு கேள்வி கேட்கலாமா அல்லது அடுத்த கேள்வி கேட்கலாமா என்று முடிவு செய்யவேண்டியது நீங்கள்தான் உங்களுடைய தீர்ப்பில் அவர்கள் கேள்வி கேட்பது எந்த விதத்தில் நியாயம் என்று நான் உங்களைக் கேட்கிறேன். (கூச்சல்-குழப்பம்) ஒரு கேள்வியோ, இரண்டு கேள்வியோ, மூன்று கேள்வியோ கேட்பதற்கு அனுமதிக்க உங்களுக்கு உரிமையிருக்கிறது. அதை எப்படி அவர்கள் 'கொஸ்டியன்' பண்ணமுடியும்? கொடுக்கலாம், கொடுக்காமலும் இருக்கலாம். அது உங்களுடைய உரிமை.

திரு. துரைமுருகன் : சார், நீங்கள்தான் எங்களை கன்ட்ரோல் பண்ண முடியுமே தவிர அவர்கள் அல்ல.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இனிமேல் கேள்வி நேரத்திலே ஒழுங்கு பிரச்னை அனுமதிக்கப்படும் என்று ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒத்துக்கொள்ளவே இல்லை. புதுப் பிரச்னையைக் கிளப்பாதீர்கள் உட்காருங்கள்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே (கூச்சல்-குழப்பம்) நான் கேட்கலாம், கேட்க கூடாது என்று சொல்வதற்கு உங்களுக்கு மட்டும் தான் உரிமையிருக்கிறது. உங்களுக்கு மட்டும்தான் நான் அடிபணிவேன். அவர்கள் (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திடீரென்று சபையிலே எல்லோரும் எழுந்தால் எப்படி? இன்றைக்கு ஏன் இப்படி? கேள்வி நேரத்தை வீணடிக்காதீர்கள். (கூச்சல்-குழப்பம்).

திரு. துரைமுருகன் : ஆளுங்கட்சியினர் கையைத் தூக்குவார்கள், எதிர்க்கட்சியினர்தான் கேள்வி கேட்பார்கள். (கூச்சல்-குழப்பம்) இந்தக் கூச்சல் எல்லாம் என்னிடம் நடக்காது.

I am no bo hered.

[1981 ஏப்ரல் 22

திரு. ஆர். மணிமாறன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்பதற்கு நீங்கள் அனுமதி அளித்தீர்கள். ஆளுங்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களும் . . . (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையைப் பொறுத்து கேள்விகள் கேட்பதற்கும் அதற்குத் துணைக் கேள்விகள் கேட்பதற்கும், அதை எந்த வகையிலே அனுமதிப்பது என்பதற்கும் தெளிவாகவே விதிமுறைகள் இருக்கின்றன. கேள்விகள் கேட்கிற நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினை கிளப்பக் கூடாது என்பதும் விதிமுறை. கேள்விகள் கேட்கின்றபோது எந்த விளக்கமும் கேட்கக் கூடாது என்பது விதிமுறை, கேள்விகள் கேட்கின்ற பொழுது உள்நோக்கம் வைத்து கேட்கக் கூடாது, குற்றச்சாட்டு இருக்கக் கூடாது என்பதும் விதிமுறை. ஆகவே கேள்விகளை யாருக்கு அனுமதிப்பது, அனுமதிப்பதா, வேண்டாமா என்பது தலைவருடைய முழுப் பொறுப்பையும் சேர்ந்தது. ஆகவே, தாங்கள் ஒருவரை அனுமதிக்கலாம், அனுமதிக்காமலும் இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பொறுத்தவரையிலும் ஒரு குறிப்பிட்ட தொகுதியைப் பொறுத்திருந்தால், ஒருவர்தான் அந்தக் கேள்வி கேட்பதற்கு உரிமை படைத்தவர் என்று தாங்கள் கருதுவீர்களானால் அவருக்கே அந்தக் கேள்வி கேட்க அனுமதி அளிக்க தங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் கேள்வியை யார் கேட்கலாம், யார் கேட்கக்கூடாது என்பதை. இருக்கிற நேரத்தைப் பொறுத்து, அதை முறைப்படுத்தி வகைப்படுத்த வேண்டிய முழுப் பொறுப்பும் தங்களிடத்திலே இருக்கிறது. தங்களுக்கு எது சரி என்று படுகிறதோ அந்த அளவுக்குத் தீர்ப்பளிக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—50)

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, 1975 ஆம் ஆண்டு அண்ணா பிறந்தநாள் மலர் ஒன்றுக்கு நிலவள வங்கிகளிலிருந்து பணம் கொடுக்கப்பட்டது என்று சொல்லி இருக்கிறார் அமைச்சர் அவர்கள், அப்படிக் கொடுக்கப்பட்டது முறையற்றது என்று வசூலிக்கச் சொல்லி இருக்கிறார்கள். அது எந்த வகையிலே முறையற்றது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். அது மட்டுமல்ல, இந்தக் கேள்விக்கு பதில் சொல்லுகிற போது அமைச்சர் இதுவரையில் கழகக் குரலுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் எல்லாம் சொல்லி எல்லாமே முறைகேடு என்று சொல்லி இருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், இது வரையில் மற்றக் கட்சிகளுக்கு இப்போது கொடுத்துக் கொண்டிருக்கும் பத்திரிக்கைகளுக்கும் முறையற்ற முறையில் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அவைகளையும்

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

சேர்த்து வசூலிப்பதற்கு, அண்ணா பத்திரிகை மற்றும் இருக்கிற எல்லா பத்திரிகைகளுக்கும் கொடுக்கப்பட்டிருப்பதை எல்லாம் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்ன காரியத்திற்காகத்தான், இந்த நோக்கத் திற்காகத்தான், விளம்பரம் தரவேண்டும் என்று விதியை மீறி முறைகேடாக இந்த விளம்பரம் தரப்பட்டது என்கிற அடிப்படை யில் தான், அது தவறு என்று சொல்லி அதை வசூலிப்பதற்கும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டது. இவ்வளவு தான் பதில்.

திருவான்மியூர் பகுதியில் குடிதண்ணீர் கிணறுகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 841—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, திருவான்மியூர் பகுதியில் குடிதண்ணீர் கிணறுகள் அமைக்கும் திட்டம் தற்பொழுது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சென்னை மாநகராட்சி யுடன் சேர்க்கப்பட்டுள்ள திருவான்மியூர் பகுதிக்கு குடிநீர் வழங்க ரூ. 32.40 இலட்ச மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள திட்டத் திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் படி 4 மீட்டர் விட்ட அளவுள்ள 4 கிணறு களும், மற்றும் ஒரு குறைந்த பட்ச ஆழமுள்ள குழாய் கிணறும் வெட்டப்பட்டு அவைகளின் மூலம் நில நீர் பெறப்படும். இந்த நீர் 7 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு உயர் மட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு ஏற்றப்பட்டு அங்கிருந்து தெருக்களில் போடப்படும் 23 கி. மீ. நீளமுள்ள குழாய்கள் மூலம் வினியோகம் செய்யப்படும். வீடுகளுக்கு வீட்டு இணைப்புகள் மூலம் குடிநீர் தரப்படும். குறைந்த வருமானமுள்ள மக்கள் தேவைக்காக பொதுக் குழாய்களும் அமைக்கப்படும்.

இதுவரை 18 கி. மீ. தூரத்திற்கு தெருக் குழாய்கள் போடப் பட்டுவிட்டன. கிணறுகள் மற்றும் தலைமை நீர் நிலையம் கட்டுதல், நீரேற்று இயந்திரங்கள் அமைப்பது போன்ற பணி களுக்கு வேலைக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு விட்டன. உயர்மட்ட நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்கான நடவடிக்கை யும் எடுக்கப்பட்டு வருகிறது. மேற் கூறிய பணிகள் யாவும் 1981 ஆம் ஆண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.